சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை –

எனக்கும், எதிர்மனுதாரர் அன்னலட்சுமிக்கும் திருமணம் ஆகும் போது அம்மா, அப்பா அவருக்கு இல்லை என்றால் சரியல்ல. அப்பா இல்லை. அம்மா இருந்தார்கள். நான் இந்த செய்தியை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் அன்னலட்சுமியின் 15 கிராம் எடையுள்ள நகை அவர்களிடம் உள்ளன என்று நான் சொல்வது சரியல்ல என்றாலும், அவர்களிடம் 3 கிராம் நகை மட்டும் தான் உள்ளது என்றாலும் சரியல்ல. அன்னலட்சுமியின் 100 கிராம் நகையை நான் என் கைவசம் வைத்துக்கொண்டு இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நகைகள் என்னிடம் இல்லை. ம.சா.ஆ.5 ஆவணத்தில் எதிர்மனுதாரருக்கு சாதாரண சிகிச்சை அளித்த விபரத்தை மட்டும் சொல்லியுள்ளேனே தவிர எனக்கும் சிகிச்சை அளித்த விபரத்தை கூறாமல் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.6 மற்றும் ம.சா.ஆ.7 ஆவணங்களானது, குழந்தையின்மைக்கான சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ குறிப்புகள் ஆகும். மேற்படி, ஆவணங்களானது சாதாரண சிகிச்சைக்காக பெறப்பட்ட மருத்துவ குறிப்புகள் என்றும், நான் பொய்யாக குழந்தையின்மைக்கான சிகிச்சை பெற்ற ஆவணம் என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.8 ஆவணமானது, எதிர்மனுதாரருக்கு தூக்கமின்மை காரணமாக அளித்த சிகிச்சை விபரக்குறிப்பு என்றால் சரிதான். மேற்படி சிகிச்சையானது, தூக்கமின்மை மற்றும் மனநல சிகிச்சைக்காக மேற்கொள்ளப்பட்டது. நான் இதை பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவர் கொடுத்த ரப்போர்ட் இது ஆகும். ம.சா.ஆ.9 மற்றும் ம.சா.ஆ.10 வது ஆவணங்கள் குழந்தை பேறு சிகிச்சைக்கு அளித்த ஆவணம் என்று நான் பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.11 வது ஆவணம் நான் ஆலங்குளம் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு என்றால் சரிதான்.

நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வரச்சொல்லி கொடுத்த புகார் மனு ஆகும். எதிர்மனுதாரரின் நகைகளை நான் கைப்பற்றி வைத்துக் கொண்டதினாலும், அவர்களின் பித்தளை பாத்திரங்களை நான் வைத்துக்கொண்டதின் காரணத்தினாலும் நான் ஆலங்குளம் காவல்நிலையத்தில் அவருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அவைகள் என்னிடம் இல்லை. அனைத்து நகைகள் மற்றும் பாத்திரங்கள் எதிர்மனுதாரரின் அம்மா சூரியகனியிடம் உள்ளது. எதிர்மனுதாரர் அன்னலெட்சுமியிடம் நான் நேரடியாக நகைகளை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தான் பீரோவில் இருந்து எடுத்து நகைகளை எதிர்மனுதாரரிடம் அவரது அம்மா இருக்கும் போது கொடுத்து விட்டேன். அந்த நகைகளுடன் அவர்கள் எனக்கு போட்ட செயின் மற்றும் மோதிரத்தையும் கொடுத்து விட்டேன். நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், அவர்களிடம் நகைகளை கொடுத்து விட்டேன் என்றாலும் சரியல்ல. நான் எதிர்மனுதாரரின் மருத்துவ சிகிச்சைக்காக ரூபாய் ஐந்து லட்சம் வரை செலவு செய்துள்ளேன். நான் எதிர்மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லை என்று பொய்யாக அவரை சிகிச்சைக்கு அழைத்து சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு சிகிச்சை எடுப்பதற்காகத் தான் அவரை அழைத்து சென்றேன் என்றால் சரியல்ல. குழந்தையின்மைக்காக எனக்கு எடுத்த சிகிச்சைக்காக நான் மருத்துவ ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு சிகிச்சையே எடுக்கவில்லை. நான் ஆரோக்கியமாகத் தான் உள்ளேன். எனக்கு எந்தவித டெஸ்டுகளும் எடுக்கவில்லை. எதிர்மனுதாரரை குற்றம் சொல்ல வேண்டும் என்பதற்காக சிகிச்சை எடுத்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் சேர்ந்து வாழ்ந்தால் தானே குழந்தை பாக்கியம் கிடைக்கும். நான் வழக்கிற்காக முன்னுக்கு பின் முரணாக பதில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரிடம் நகைகளை அபகரிக்க நான் முன்னுக்கு பின் முரணாக பதில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தான் தாலிச் செயின் எதிர்மனுதாரருக்கு

போட்டேன். நான் வழக்கிற்காக தாலிச் செயின் போட்டேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் நான் பொய் சொல்லவில்லை. நகைகள் வாங்கிய ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் 2007ம் ஆண்டு வாங்கிய ரசீது என்னிடம் இல்லை. நான் சொல்வது அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. நான் உண்மையைத் தான் கூறுகிறேன்.

(ஒம்)ஏ.பிஸ்மிதா
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.